DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 21/2018**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பெரோஸ்கான் | Caste: | |
| Father's Name: | சீனி முகமது | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 42 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 07.11.2025

( 2ம் எதிரி ஆஜர். 1,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு பிரிவில் முதுநிலை உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.01.2017 அன்று நான் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுமார் 60 வயது மதிக்கத்தக்க முத்து என்பவருடைய கணவராகிய மாரி என்பவரை அவருடைய வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு அனுமதித்தார்கள். நான் அவரை பரிசோதித்ததில் வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதற்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற அவசியத்தை எடுத்து கூறினேன். அவர்கள் அதற்கு சம்மதித்து அவருக்கு நான் அறுவை சிகிச்சை செய்தேன். பின்னர் 15.02.2017ம் தேதி மருத்துவமனையில் இருந்து விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய

காயச்சான்று **அ.சா.ஆ.8.** மேற்படி காயம் கனமான இரும்பு கம்பியால் அடித்தால் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எக்ஸ்ரே எடுத்தேனா என்றால் எடுத்தேன். அந்த எக்ஸ்ரேயை புலனாய்வு அதிகாரியிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன்.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 21/2018**

அ.சா.10

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலசுப்பிரமணியன் | Caste: | |
| Father's Name: | செங்குட்டுவன் | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 37 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 07.11.2025

( 2ம் எதிரி ஆஜர். 1,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.01.2017 அன்று நான் இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது பிற்பகல் 2.25 மணியளவில் பானனேந்தல் கிராமத்தை சேர்ந்த அரசன் மகன் மாரி என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் அன்றைய தினம் அவரது வீட்டருகே 10 தெரிந்த ஆண் நபர்கள் தன்னை இரும்பு கம்பியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதிக்கையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு. 1. தலையின் வலது புறத்தில் 6 x 1 x 1 cm அளவில் கிழிந்த காயங்கள் காணப்பட்டன. 2. வலது முன்னங்கையில் 1 x 0.5 x 0.5 cm அளவில் துளையிட்ட காயம் காணப்பட்டது. அவரை

உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்க பரிந்துரைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு அறிக்கை **அ.சா.ஆ.9**. அன்றைய தினமே பிற்பகல் 2.20 மணியளவில் பானனேந்தல் கிராமத்தை சேர்ந்த மாரி மகன் சோனைமுத்து என்பவர் சிகிச்சைக்காக அவரது மனைவியால் அழைத்து வரப்பட்டார். அவரும் தன்னை அன்றைய தினம் தனது வீட்டருகே தெரிந்த 10 ஆண் நபர்கள் இரும்பு கம்பியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதிக்கையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு. 1. தலையின் பின்புறத்தில் 2x2 cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 2. முன்தலையின் வலதுபுறத்தில் 2cm அளவில் கீறிய காயம் காணப்பட்டது. 3. வலது மணிக்கட்டில் 2x2 cm அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து மேல்சிகிச்சை அளிக்க பரிந்துரைத்தேன். அவருக்கு நான் தயார் செய்த விபத்து பதிவேட்டு அறிக்கை **அ.சா.ஆ. 10**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

மாரியும் சோனைமுத்துவும் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தவறி தார் ரோட்டில் கீழே விழுந்தால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் சரிதான்.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)